செய்தி வெளியீடு எண்: 568 நாள்:04.09.2019

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 03.09.2019 அன்று நியூயார்க்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வெளிநாடு வாழ் தமிழர்களின் முதலீடுகளை ஈர்க்க ஏதுவாக "யாதும் ஊரே" என்ற திட்டத்தினை துவக்கி வைத்து பேசியதாவது:**

உலகெங்கும் சென்று தமிழரின் பண்பாட்டுச் சிறப்பையும், அறிவுத் திறத்தையும் பறைசாற்றி தமிழுக்கும், தமிழ் மண்ணுக்கும் பெருமை சேர்த்து வருகின்றீர்கள். உலகில் எந்த மூலையில் இருந்தாலும், உங்கள் உயிராய் தமிழும், உள்ளமெல்லாம் தமிழ்நாடும் விளங்குகிறது என்பதை நான் அறிவேன். உலகின் மாபெரும் அறிவியல் தொழில்நுட்ப நிறுவனங்கள், தொழிற்சாலைகள், கைவினைஞர்கள், புத்தொழில்கள் என துறைகள்தோறும் சாதனைகள் செய்து பல நாடுகளில், புதிய தொழில் பலவற்றையும் தொடங்கி

"சீன மிசிரம் யவனரகம்—இன்னும்
தேசம் பலவும் புகழ் வீசிக்—கலை
ஞானம் படைத்தொழில் வாணிபமும்—மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு"

என்று பாடிய பாரதியாரின் வாக்கின்படி, கோடிக்கணக்கான தமிழர்களின் உழைப்பால் தமிழகம் உயர்ந்து விளங்குகிறது. வறுமை நிலை என்பது துளியும் இல்லாத இந்தியாவின் வளம் நிறைந்த வளர்ச்சியில் சிறந்த மாநிலமாக, தமிழ்நாடு விளங்கிட வேண்டும். ஒரு நவீன சமுதாயம் பெறவேண்டிய அனைத்து அடிப்படை சேவைகளையும் பெற்று, உணர்வு சூழலோடு இரண்டறக் கலந்து ஒன்றி, தமிழ்நாட்டு மக்கள் உயர்ந்திட வேண்டும். இதுவே தமிழ்நாட்டிற்கான எனது தொலைநோக்குப் பார்வை என்று சூளுரைத்த மாண்புமிகு அம்மா அவர்கள் இட்ட பாதையில் எனது தலைமையிலான அரசு தொடர்ந்து பயணித்து வருகிறது.

இந்த வகையில், இந்தியாவின் சிறந்த மாநிலமாகிய தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை மேலும் சிறப்பாக்கும் பொருட்டு, உலகெங்கும் வாழ்ந்து வரும் தமிழர்களின்

சீரிய ஆலோசனைகளைப் பெறவும், தமிழ்நாட்டில் தொழில் துவங்க முன்வரும் வெளிநாட்டு வாழ் தமிழ் மக்களுக்கு ரத்தினக் கம்பளம் விரித்து வரவேற்போம், உங்களைத் தேடி தமிழ்நாடு அரசு சார்பில் முதல் முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சரான நான் வருகை தந்துள்ளேன்.

எழுதிய பாடநூல் ஒன்றுதான் என்றாலும், தமிழர்களின் உள்ளத்து உயர்வையும், ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் முன்னோர் கொண்டிருந்த உயர்ந்த உலகளாவிய பார்வையையும் இன்றளவும் எடுத்துக் காட்டும் வகையில், காலத்திற்கும் நிலைத்து நிற்கும் கணியன் பூங்குன்றனாரின் வைர வரிகளையே பெயராக "யாதும் ஊரே" என்ற ஒரு புதிய திட்டத்தை தமிழ்நாடு உருவாக்கும் என சமீபத்தில் நடைபெற்ற சட்டப் பேரவைக் கூட்டத் தொடரின் போது நான் அறிவித்திருந்தேன்.

அதன்படி, உலகெங்கும் வாழும் தமிழர்களை நினைத்திட ஒரு புதிய உறவுப்பாலம் அமைக்கும் தமிழ்நாடு அரசின் இந்த உன்னத முயற்சியை அமெரிக்காவில் துவக்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்நாடு அரசு தொழில் துறையின் கீழ் இயங்கும், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் இணையதளத்தில் "யாதும் ஊரே" என்ற தனி தரவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் உங்கள் முதலீடு ஆலோசனைகள் நேரடியாக தமிழ்நாடு அரசை வந்தடையும். நீங்கள் தமிழ்நாட்டில் தொழில் முதலீடு செய்ய விரும்பினால், அதற்கான வழிமுறைகளை எடுத்துக்கூறி, Single Window System என்று சொல்லக்கூடிய ஒற்றைச் சாளர முறை, சிறப்பான நிர்வாகம், அமைதியான சூழல், திறன்மிகு மனித வளம், ஈடு இணையில்லா உட்கட்டமைப்பு, தடையில்லா மின் விநியோகம், இந்தியாவின் நுழைவு வாயிலாக விளங்கும் வகையிலான பூகோள அமைப்பு என

தமிழ்நாட்டின் தனித்துவத்திற்கு, இங்கு விரும்பி வந்து தொழில் துவங்கும் பன்னாட்டு நிறுவனங்களே சான்று.

சமீபத்தில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின்போது கையெழுத்திட்ட 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் மூலம் 3 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு உத்தரவாதம் வரப்பெற்றுள்ளது. இவற்றில் இதுவரை 220 நிறுவனங்கள் தங்களுடைய முதலீடுகளை துவங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தொழில் துறைக்கு, தமிழ்நாட்டில் இது வசந்த காலம் என்பதற்கு இதை விட பெரிய சான்று தேவையில்லை. திசையெங்கும் சென்று சிறப்புகள் பல பெற்று உயர்ந்து விளங்கும் நீங்கள் தமிழ்நாட்டின் மேம்பாட்டிற்காக, தமிழக தொழில் துறையின் சிறப்புக்களையும், முதலீட்டிற்கு உகந்த சூழலையும் பாரெங்கும் எடுத்துச் செல்லும் முதலீட்டுத் தூதுவர்களாக விளங்கிட வேண்டும் என தமிழ்நாடு அரசின் சார்பில் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

"எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்,
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே"

என்று முழங்கிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வழியில் இன்று நாம் இணைந்திருக்கிறோம். இந்நாள் தமிழ்நாட்டின் வரலாற்றில் ஒரு பொன்னாளாக, புது துவக்கமாக அமைந்திட வேண்டும். என் அன்புத் தமிழர்களே, "பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின் அருமை உடைய செயல்" என்று வான்புகழ் வள்ளுவர் உரைத்ததைப் போல, நாம் இன்று துவங்கும் இந்த புதிய முயற்சி உங்கள் அன்போடும், ஆதரவோடும் தமிழ்நாட்டின் நீடித்த நிலையான வளர்ச்சிக்கு ஊக்கமாக அமையும் என்பதில் எனக்கு சிறதளவும் சந்தேகமில்லை. இந்த முயற்சியில் உங்களுக்கு என்றும் உற்ற துணையாக மாண்புமிகு அம்மாவின் அரசும்,

தமிழ்நாட்டு மக்களும் என்றைக்கும் இருப்போம் என உறுதி அளிக்கின்றேன். இன்றையதினம் மதியம் 2 மணியளவில் நடைபெற்ற தொழில் முதலீட்டாளர்கள் நிகழ்ச்சியிலே 16 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன. அதன் வாயிலாக தமிழகத்திலே 2,780 கோடி ரூபாய் முதலீடு செய்ய முன்வந்த தொழில்முனைவோர்களுக்கு மனமார, உளமாற தமிழகத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழர்கள் எங்கு சென்றாலும் விசுவாசமாகவும், உழைப்பவர்களாகவும் இருப்பார்கள். ஆகவே, விசுவாசத்திற்கும், உழைப்பிற்கும் பெயர் பெற்றவர்கள் தமிழர்கள். அந்த உழைப்பு தான் உங்களை உயர்த்தியிருக்கின்றது. இந்த உழைப்பு தமிழகத்திற்கு கிடைக்க வேண்டும். அதற்கு நீங்கள் மனமார, உளமாற தொழில் முதலீடு செய்ய முன்வர வேண்டும். ஆகவே, இந்த விசுவாசமும், உழைப்பும் இருக்கின்ற காரணத்தினால்தான், இங்கே மகிழ்ச்சியோடு நீங்கள் அமர்ந்திருக்கின்றீர்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துக்களை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் மாநிலத்தில் எந்த ஒரு இடத்தில் இருந்தாலும், அங்குள்ள அத்தனை பேரும் இங்கே அயல்நாடான அமெரிக்காவில் தொழிலதிபர்களாக, மருத்துவர்களாக, பொறியாளர்களாக, இன்னும் பல பணிகள் புரிகின்ற அத்தனை பேரும் தமிழ் என்று சொல்லின் கீழ் வருகின்ற தமிழ் சொந்தகளாகிய அனைவரும் தமிழ் என்ற ஒரு குடையின் கீழ் இங்கே குழுமியிருக்கின்றோம். ஆகவே, தமிழ் என்ற சொல்லுக்கு எந்த அளவு ஈர்ப்பு இருக்கின்றது என்பதை இங்கே காண முடிகிறது. ஆகவே, இதையெல்லாம் பார்க்கும்பொழுது, நீங்கள் தொழில் முதலீடு செய்வதற்கு மனமார, உளமாற முன்வர வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். என்னைப்

பொறுத்தவரைக்கும் அரசியலிலே ஒரு படி மேலே வந்திருக்கின்றேன். நான் முதலமைச்சராக வருவேன் என்று கனவு கூட காணவில்லை. இருந்தாலும், ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களிடத்தில் விசுவாசமாக இருந்த காரணத்தினால் படிப்படியாக நான் உயர்ந்தேன். நான் 6 முறை சட்டமன்றத் தேர்தலிலும், 3 முறை நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டு, பல முறை வெற்றி பெற்றிருக்கின்றேன், சிலமுறை வெற்றி வாய்ப்பை இழந்திருக்கின்றேன், ஆகவே, அந்த உழைப்பால் நான் இங்கே நிற்கின்றேன், உழைப்பால் நீங்கள் இங்கே அமர்ந்திருக்கின்றீர்கள். நான் முதலமைச்சராக இருக்கின்ற காரணத்தினால்தான் உங்களை சந்திக்க முடிகின்றது, இந்த எடப்பாடி பழனிசாமியை நீங்களும் காண முடிகின்றது, உங்களை சந்திக்கின்ற வாய்ப்பை இறைவன் நமக்கு அளித்திருக்கிறார், அதற்கு இறைவனுக்கு இந்த நேரத்தில் நன்றியை கூறிக் கொள்கிறேன். இன்றைக்கு தமிழ் சொந்தங்களை இறைவன் இணைத்திருக்கின்றார், அந்த இறைவனுக்கு அனைவரும் நன்றி சொல்லி, இந்த நிகழ்ச்சியை சீரோடும், சிறப்போடும் தமிழ் சங்கத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் மிக பிரம்மாண்டமாக அமைத்ததற்கு அவர்களுக்கு மனமார, உளமாற பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து, இங்கே வந்து பணிபுரிகின்ற அத்தனை நல்ல உள்ளங்களும் சீரோடும், சிறப்போடும் எல்லாம் வல்ல இறைவன் அருளால் நலமோடும், வளமோடும் வாழ்ந்து, தமிழகத்திற்கு நீங்கள் பெருமை சேர்க்க வேண்டுமென்று கூறி, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி, தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**